

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விக்கிரவாண்டி பேரூராட்சியில், முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 93வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், பேரூராட்சி செயலாளர் நயினா முகம்மது, ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, கல்பட்டு வி.இராஜா, ஜெய.ரவிதுரை, வேம்பி ரவி, ஆர்.முருகன், ஜெ.ஜெயபால், ஆர்.பி.முருகன், வே.கில்பர்ட் ராஜ், ஒன்றிய குழு தலைவர்கள் கலைச்செல்வி, சங்கீதாஅரசி, பேரூராட்சி துணை தலைவர் ச.பாலாஜி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கி, தி.மு.கழகத்தின் கொள்கைப் பாசறையைச் செதுக்கிய முரசொலி மாறன் அவர்களின் 93 வது பிறந்தநாளான திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் வாணியம்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் அவரின் திருவுருவப் படத்திற்கு திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், மாவட்டப் பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் கே.ஆர்.திருப்பதி, ஆலங்காயம் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் வி.ஜி.அன்பு, உதயேந்திரம் பேரூர் செயலாளர் ஆ.செல்வராஜ், மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் சையத்அபீப்தங்கல், மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் சக்கரவர்த்தி, மேகநாதன், மாவட்ட பிரதிநிதி மனோகரன், பேரூர் பொருளாளர் பீர் முகமது கனி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வி.எஸ்.கார்த்திக் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டார்கள்.

### கர்நாடக வனத் துறையினரால் 3 தமிழர்கள் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு:

# வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் – கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

*சென்னை, ஆக.18-* கர்நாடக வனப்பகுதியில் 3 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், அவர்களுக்கு தமிழ்நாடு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றும், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

கர்நாடக மாநிலம் சாம் ராஜ்நகர் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில், கர்நாடக வனத்துறையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூன்று தமிழர்கள் உயிரிழந்துள்ள செய்தி பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

மனித உயிர்களைப் பறிப்பதற்கு எந்த அரசுக்கும் அதிகார அமைப்பிற்கும் உரிமை கிடையாது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் எழுப்பியுள்ள சந்தேகங்களைக் கருத்தில் கொண்டு வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும். உயிரிழந்த மூன்று பேரின் குடும்பங்களுக்கு தமிழ்நாடு அரசு உரிய நிவாரணம் வழங்குவதோடு, இந்தச் சம்பவத்தில் உண்மை நிலையை வெளிக்கொணர கர்நாடக அரசிற்கு தொடர்ந்து அழுத்தம் தர வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### புதுச்சேரியில்

# முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை!

## இரா.சிவா தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

*புதுச்சேரி, ஆக். 18-* முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கியவரும், ஒன்றிய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாக பணியாற்றிய வருமான முரசொலி மாறனின் 93வது பிறந்த நாளை முன்னிட்டு, புதுச்சேரி மாநில கழகம் சார்பில், லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமை அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாநில அமைப்பாளர் இரா. சிவா தலைமையில் திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கியவரும், ஒன்றிய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாக பணியாற்றியவருமான முரசொலி மாறனின் 93வது பிறந்த நாளை முன்னிட்டு, புதுச்சேரி மாநில கழகம் சார்பில், லப்போர்த் வீதியில் உள்ள தி.மு.க. தலைமை அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலிமாறன் திருவுருவப் படத்திற்கு மாநில அமைப்பாளர் இரா. சிவா தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி. அனிபால் கென்னடி, பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வே. கார்த்திகேயன், அ. செந்தில் (எ) ரமேஷ், விக்னேஷ் கண்ணன், மாநில துணை அமைப்பாளர் அ. தைரியநாதன்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி. அருட்செல்வி, தொகுதி பொறுப்பாளர் எஸ். கோபால், மங்கலம் எஸ்.எஸ். ரங்கன், இந்திரா நகர் பசுபிக் சங்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் ந. தங்கவேலு, ஜெ. வேலன் (எ) கோவிந்தன், நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், செ. நடராஜன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், சவுரிராஜன், ரா. ஆறுமுகம், பி.சா. இளஞ்செழிப்பாண்டியன், ராதாகிருஷ்ணன். கலிய கார்த்திகேயன்,

அணிகளின் அமைப்பாளர்கள் இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, நெசவாளர் அணி ந.செந்தில் முருகன், மருத்துவர் அணி லூர். ஆனந்த் ஆரோக்கிய ராஜ், மகளிர் அணி காயத்ரி, மகளிர் தொண்டர் அணி சுமதி, வர்த்தகர் அணி ரமணன், அணிகளின் துணை நிர்வாகிகள் குரு, தர்மன், ராஜேஷ், தேவேந்திரன், தாமரைக்கண்ணன், அன்பழகன், விஜி (எ) வெங்கடேசன், பாலகுரு, ரபேல், கருணாகரன், அஜிபாஷா, அருண் சுப்பிரமணியன், சிவதாசன், யோகேஷ் பிரிய தர்ஷினி, விஜயலட்சுமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை

# அமைப்பாளர் சண்முகநாதன் மறைவு!

## கே.ஆர்.பெரியகருப்பன் -மு.தென்னவன் உட்பட கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை, ஆக.18- சிவகங்கை மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர்அ.மு. சண்முகநாதன் மரணம் அடைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா இடைக்காட்டுரை சேர்ந்தவர் அ.மு. சண்முகநாதன் வயது 56. இவர் இரண்டு முறை இடைக்காட்டூர் ஊராட்சி மன்ற தலைவராகவும், மானாமதுரை ஒன்றிய கவுன்சிலராகவும் பதவி வகித்துள்ளார். தற்பொழுது சிவகங்கை மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளராக உள்ளார். இவர் நேற்று முன்தினம் மறைவெய்தினார். சண்முகநாதனுக்கு சுமலதா என்ற மனைவியும், இரண்டு பெண் குழந்தைகள், ஒரு ஆண் குழந்தை உள்ளனர் . சண்முகநாதன் உடலுக்கு முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர். பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி அவரது மனைவி மற்றும் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்கள். சண்முகநாதன் உடலுக்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர் தா. ராமையா, முன்னாள் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார்,எஸ் மாரியப்பன் கென்னடி ,இனிகோ இருதயராஜ், மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் துரை.ராஜாமணி, எம் அண்ணாதுரை, எம்.ஏகடம்பசாமி, ,கே. பாலசுப்பிரமணியன், மானாமதுரை நகர் கழக செயலாளர் க.பொன்னுசாமி , முன்னாள் ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ் .நாராயணன், ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் மற்றும் ஒன்றிய, நகர, ஊராட்சிக் கழக நிர்வாகிகள், பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் சுற்றுப்புற கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அஞ்சலி செலுத்தினார்.

### சென்னை 112 ‘அ’ வட்ட அவைத் தலைவர் ஜி.பாண்டியனின் தாயார்

# திருமதி ஜி.சரோஜா அம்மாள் மறைவு!

## நே.சிற்றரசு - முரசொலி சிங்காரம் - கழகத்தினர் அஞ்சலி!

*சென்னை, ஆக. 18-* சென்னை, கோடம்பாக்கம் 112 ‘அ’ வட்டம், நினைவில் வாழும் மிசா.வே.குருநாதனின் மனைவியும், 112 ‘அ’ வட்ட அவைத் தலைவர் ஜி.பாண்டியனின் தாயாருமாகிய திருமதி ஜி.சரோஜா அம்மாள் 16.8.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



மறைவு செய்தி அறிந்ததும் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தொழிலதிபர் முரசொலி சிங்காரம் மற்றும் கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாருக்கு கு.செல்வம், கு.பாண்டியன், கு. தென்னவன் ஆகிய மூன்று மகன்களும் ஆ.விஜயா, ஜி.கலையரசி ஆகிய இரு மகள்களும் உள்ளனர்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் நேற்று (17.8.2026) மாலை 4 மணியளவில் நுங்கம்பாக்கம் மயானத்தில் நடைபெற்றது.

### ஓய்வூதியம் – மறு பரிசீலனையின்றி 30 ஆண்டுகளாக பாதிப்படைந்து வரும்

# 8 லட்சம் வங்கி ஊழியர்களுக்கு தாமதமின்றி நீதி வழங்குக!

## பாரத் ஸ்டேட் வங்கி முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்களின் கூட்டமைப்பு வலியுறுத்தல்!

தஞ்சை, ஆக.18 பாரத ஸ்டேட் பேங்க் முன்னாள் தொழிற்சங்க தலைவர்களின் கூட்டமைப்பின் பத்தாவது பொதுக்குழு கூட்டம் தஞ்சாவூர் அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்க மாளிகை, சரோஜ் நினைவகத்தின், என். எம்.சுந்தரம் அரங்கில் நடந்தது.

பொதுக்குழு கூட்டத்துக்கு அமைப்பின் தலைவர் எஸ். பி. இராமன் தலைமை வகித்தார். பாரத ஸ்டேட் பேங்க் ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் டி.சிங்காரவேலு, துணைத்தலைவர் டி.வி. சந்திரசேகரன், துணைச்செயலாளர் எம்.முருகையா, பொருளாளர் என். சுப்பிரமணி யன், உதவிப் பொருளாளர் வீ. பூமிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வருகை தந்த அனைவரையும் மதுரை பரவை எஸ்.பாலசுப்பிரமணியன் வரவேற்றார். சென்னை ரத்தினவேல் சுப்பிரமணி நன்றியுரை ஆற்றினார். நீண்ட விவாதங்களுக்கு பிறகு நாட்டின் நலன், வங்கி ஓய்வூதியர்களின் நலன் சார்ந்த கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

பொதுத்துறை அமைப்பான எல்.ஐ.சி யின் பங்குகளை விற்பனை செய்யும் தவறான முடிவை ஒன்றிய அரசு தாமதமின்றி திரும்பப் பெற முன் வரவேண்டும்.

பொதுத்துறை வங்கிகளில் வாடிக்கையாளர்களிடம் மினிமம் பேலன்ஸ் வைக்காததற்காக தண்டனையாக பிடித்தம் செய்யப்பட்ட ரூபாய் 26100 கோடியை திரும்ப அளிப்பதோடு, இத்தகைய தவறான



நடைமுறையை தாமதமின்றி கைவிட பொதுத்துறை வங்கிகளுக்கு ஒன்றிய அரசு அறிவுறுத்த வேண்டும். வங்கி ஓய்வூதியவர்களுக்கு பஞ்சப்படி உயர்வை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வழங்கும் நடைமுறையை தாமதமின்றி நடைமுறைப்படுத்த பொதுத்துறை வங்கி நிர்வாகங்கள் முன்வர வேண்டும்.

பென்சன் மறுபரிசீலனை செய்யாமல் (PENSION UPDATION) கடந்த முப்பது ஆண்டுகளாக பாதிப்படைந்து வருகிற எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு தாமதமின்றி நீதி வழங்க பொதுத்துறை வங்கிகள் நிர்வாகம் முன் வரவேண்டும்

கடந்த 1995 ஆம் ஆண்டு கையெழுத்தாகி, 2003 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட சட்டத்தின் படி, ரிசர்வ் வங்கி, நபார்டு வங்கி ஆகிய வற்றுக்கு அளிக்கப்படுவதைப் போல ஒவ்வொரு வங்கித்துறை ஊதிய ஒப்பந்தத்தின் போதும் ஓய்வூதியம் மறுபரிசீலனை செய்யப்பட்டு உயர்த்தி வழங்கப்பட வேண்டும். கடந்த ஐந்து ஆண்டுகளில் பொதுத்துறை வங்கிகள் நிகர இலாபமாக 689000 கோடி ஈட்டி ஒன்றிய அரசுக்கு வழங்கி உள்ளது.

கடந்த நிதி ஆண்டின் இறுதியில் பொதுத்துறை வங்கி ஊழியர்கள் செலுத்திய பென்சன் தொகை 486000 கோடியாகும். கடந்த ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சிக்காகவும் சமுதாய மேம்பாட்டிற்காகவும் பசி நோக்காது கண் துஞ்சாது உழைத்த எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு சட்டப்படி வழங்கப்படவேண்டிய ஓய்வூதிய மறுசீரமைப்பை வழங்காமல் வஞ்சிப்பதும், நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்கும் சூழலை உருவாக்கி, காரணம் இன்றி கால தாமதம் செய்யாமல் 1995 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரை ஓய்வூதியத்தை உயர்த்தி மறுசீரமைத்து, ரிசர்வ் வங்கியின் விகிதப்படி எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு தாமதமின்றி நீதி வழங்கி பொதுத்துறை வங்கிகளும், இந்திய வங்கிகள் நிர்வாகமும், ஒன்றிய அரசும் நல்ல முடிவை அறிவிக்க வேண்டுமென AFCCOM வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

மூத்த குடிமக்கள் அனைவருக்கும் மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போல இலவச பேருந்து பயண வசதி அளிக்க தமிழக அரசு முன்வர வேண்டும்

அண்டை மாநிலங்களான மஹாராஷ்ட்ரா, ஹரியானா, நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் மூத்த குடிமக்களுக்கு இலவச பேருந்து பயண வசதி வழங்கப்பட்டு வருகிறது. கர்நாடகா, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் மூத்த குடிமக்களுக்கு 25 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம் வரை பேருந்து பயண கட்டண சலுகை வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு துறைகளில் முன்னேற்ற தடம் பதித்து வரும் தமிழ்நாட்டில் மூத்த குடிமக்களுக்கு இலவச பேருந்து பயண சலுகை வழங்குவது அவர்கள் வாழ்நாளில் நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்துக்கு ஆற்றிய ஆக்கப்பூர்வமான பங்கை அங்கீகரிப்பதாக அமைவதோடு அரசின் மீது பொது மக்களுக்கு நல்லெண்ணத்தை உருவாக்குவதாக அமையும் என்பதை கருத்தில் கொண்டு செயல் படுத்த தமிழக அரசு முன் வரவேண்டும் என AFCCoM வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

**பங்கேற்றோர்**

பொதுக்குழுவில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எம்.சந்திரா கில்பர்ட், என்.பாண்டுரங்கன், பாண்டிச்சேரி எஸ்.கருணாகரன், கோவை எம்.ரகுநாதன், வேலூர் ஆர்.லோகநாதன், குன்னூர் எம்.ராஜகோபால், நாகர் கோயில் அஹமது ஹுசைன், செயலாளர் எம். கே. மூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர், ஒரத்தநாடு ஸ்டேட் பேங்க் ஸ்டாப் யூனியன் முன்னாள் கிளைச் செயலாளர் வி.சம்பத் பொதுக்குழுவுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# முரசொலி மாறன் 93வது பிறந்தநாள் விழா!

## டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை!

*திருவண்ணாமலை, ஆக். 18-* திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும், திராவிட இயக்க தத்துவ பேராசானுமான முரசொலி மாறன் அவர்களின் 93வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. அவரது திருவுருவப் படத்திற்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் கழக முன்னோடிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

17.08.2026 திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திராவிட இயக்க தத்துவ பேராசான் முரசொலி மாறன் அவர்களின் 93வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

முரசொலிமாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

விழாவில் மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் மாவட்ட துணைச் செயலாளர் ப்ரியா விஜயரங்கன், மாநில தொ.மு.ச. துணைச் செயலாளர் க.சௌந்தரராசன் மற்றும் கழக முன்னோடிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

பிறந்த நாள் விழாவில் மாநில அமைப்புசாரா தொ.மு.ச., ஏ.ஏ.ஆறுமுகம், து.சக்கரவர்த்தி, மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி. எம்.நேரு, ஜெ.மெய்கண்டன், கு.கணேஷ், எஸ்.டி. ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ. அருண், பவர் அன்பரசு, இரா.அன்பரசு, கற்பகம் சரவணன், பகுதி பொறுப்பாளர் ந.சீனுவாசன், பா. ஷெரீப், மாநகர துணை மேயர் சு.ராஜாங்கம், நகர நிர்வாகிகள் வட்டி அருணாச்சலம், இல.குணசேகரன், வழக்கறிஞர்கள் எஸ். கண்ணதாசன், ந.முரளி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆர்.வெங்கடேஷ், ஆ.தே.முருகையன், சுனாபேகம், பச்சையம்மாள்யேசு, கஸ்தூரி, காமாட்சிபாண்டியன், இளைஞர் அணி சபரி, வ.சம்பந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக நூற்றுக்கணக்கான பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், திராவிட இயக்க தத்துவ பேராசான், மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 93வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருவுருவப் படத்திற்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கோ.கண்ணன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், க.சௌந்தரராசன், சு.ராஜாங்கம், ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், ந.சீனுவாசன், எஸ்.கண்ணதாசன் உட்பட பலர் உள்ளனர்.